மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.
முன்னிலை : திருமதி.P.கோபால அரசி, பி.எஸ்சி., பி.எல்.
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.
2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ம் நாள் வியாழன்கிழமை.

**I.A. No.475/2024 in O.S.No.61/2023**

குணசீலி ... மனுதாரர்/பிரதிவாதி

**/எதிர்/**

சிவலிங்கம் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 29.11.2024 அன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கவிராஜ்.S.ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.வில்லின் பெலிக்ஸ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் ஆய்வின் கீழ் இருந்தும் வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

பிராது தபசில் மற்றும் எதிர்வழக்குரையில் கண்ட சொத்துக்களை நில அளவையர் உதவியுடன் அளவை செய்து அதன் தன்மை மற்றும் அமைப்புகளை கண்டறிந்து வரைபடம் சகிதம் அறிக்கை தாக்கல் செய்யும் பொருட்டு நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி, உ.வி.மு.ச. கட்டளை 26 விதி 9 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:–**

(1.1) இம்மனுவில் மனுதார், அசல் வழக்கில் பிரதிவாதி. மனுதாரர் தாவா வழக்கில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை தபசில் சொத்தை பொதுப்பாதை என்று விளம்புகை செய்து, மேற்படி பாதையை மனுதாரர், எதிர்மனுதாரர்/வாதியுடனும், மேற்படி பகுதி மக்களுடனும் அனுபவிப்பதற்கு யாரும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார்.

(1.2) தாவா வழக்கில் கண்ட எதிர்மனுதாரர்/வாதி பிராது தபசில் சொத்தாக காட்டியுள்ள பகுதியில் பாதை எதுவும் இல்லை என்று வீண் கட்சி செய்து வருகின்றார்.



P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2024.12.05 15:52:59 +0530

எதிர்மனுதாரர்/வாதி பிராது தபசில் சொத்தாக காட்டியுள்ள பகுதி சாத்தான்குளம் கஸ்பா, தச்சன்மொழி நாடார் தெற்கு தெருவில் உள்ள பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி வரும் பிரதான பாதை ஆகும்.

(1.3) மேற்படி பாதையானது சாத்தான்குளம் to முதலூர் மெயின் ரோட்டிலிருந்து ஆரம்பமாகி மேற்கு பக்கமாக வந்து வடபுறமாக திரும்பி பின்பு மேல்புறம் சென்று தென்வடலாக உள்ள சாலையில் சென்று இணைகிறது. மேற்படி பாதையை மனுதாரர் பகுதி மக்கள் காலம் காலமாக பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி பாதையை அனுசரித்து, சாத்தான்குளம் பேரூராட்சி நிர்வாகத்தால் மேற்படி பாதையில் கல்சாலை அமைக்கப்பட்டிருந்தது.

(1.4) தற்போது மேற்படி கல்சாலையின் மீது தார் சாலை அமைத்தூள்ளனர். ஷை பாதை வழியாக சாத்தான்குளம் பேரூராட்சி நிாகத்தால் குடிநி இணைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. ஷை பாதை வழியாகவே பாதாள சாக்கடை சென்று வருவதுடன் பொதுமக்கள் அநேகம் பேர் பயன்படுத்தும் கேபின் இணைப்புகளும் ஷை பாதை வழியாக சென்று வருகிறது. இது தவிர ஷை சொத்திற்கான புல வரைபடத்தில் வை பாதை விபரம் தனி உட்பிரிவு செய்து குறிப்பிடப்பட்டுள்ளது.

(1.5) மேற்படி பாதைக்கு கிழக்கு பக்கம் உள்ள சொத்தை, மனுதாரர் கடந்த 24.06.2011 அன்று தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பெற்று அனுபவம் செய்து வருகின்றார். மனுதாரர் பெற்ற மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் கிழக்கு பக்க எல்கையில் தென்வடல் பொது பாதைக்கும், சிவலிங்கம் வீட்டுக்கும் கிழக்கு என்று மேற்படி பாதை எஸ்தலத்தில் இருக்கிற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

(1.6) அதனடிப்படையில் மனுதாரர், அவரது வீட்டின் ஜன்னல் மற்றும் சன்சைடு போன்றவற்றை மேற்படி பாதையை நோக்கியே அமைத்துள்ளேன். மேற்படி பாதையானது ஸ்தலத்தில் கிழமேல் 9 அடி அகலமும், தென்வடலாக 63 அடி நீளத்தில் இருந்து வருகிறது. எதிர்மனுதாரர்/வாதி மேற்படி பாதையை ஆக்கிரமிக்க முயன்ற நிலையில், மனுதாரர் மேற்படியார் மீது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பல்வேறு புகார்மனுக்கள் கொடுத்ததின் பேரில் சாத்தான்குளம் காவல்துறையினர் எதிர்மனுதாரர்/வாதியை எச்சரிக்கை செய்து எழுதிவாங்கி அனுப்பியுள்ளனர்.



P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI
Date: 2024.12.05 15:53:47 +0530

(1.7) எதிர்மனுதாரர்/வாதி சாத்தான்குளம், தேர்வுநிலை பேரூராட்சிக்கு சொந்தமான மேற்படி பாதையை ஆக்கிரமிக்கும் எண்ணத்துடன் எந்தவிதமான ஆவணமும் இன்றி, மோசடியான விபரங்களை கூறி, தாவா வழக்கை தாக்கல் செய்ததுடன், தாவா வழக்கை அபத்தமாகக் கொண்டு மேற்படி பாதையில், மனுதாரரின் அனுபவத்திற்கு கடந்த 01.08.2023 முதல் வீண் இடையூறு செய்து வருகின்றார்.

(1.8) இதுதவிர எதிர்மனுதாரர்/வாதி மேற்படி பொதுபாதையை ஆக்கிரமிக்கவும், அதில் அழிமதி ஏற்படுத்தி அதன் அமைப்புகளை மாற்றவும் முயன்று வருகிறார். எதிர்மனுதாரர்/வாதி பிராதில் கூறியுள்ளது போல, பிராதில் கண்ட இடம் எந்த காலத்திலும் எதிர்மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டிருப்பது கிடையாது. மேற்படி பாதையானது சாத்தான்குளம் தேர்வுநிலை பேரூராட்சிக்கு பாத்தியப்பட்டு அவர்களது அனுபவத்திலும், ஆளுகையில் இருந்து வருகிறது.

(1.9) மேற்படி பாதையை மனுதாரரும், எதிர்மனுதாரர்/வாதியும், மேற்படி பகுதி மக்களும் அனுபவம் செய்து வருகின்றார்கள். மேற்படி பாதையானது எதிர்வழக்குரை தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் /வாதி மேற்படி உண்மையை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி, தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளதுடன், எதிர்வழக்குரை தபசில் சொத்தில் காட்டியுள்ள பொதுப் பாதையை ஆக்கிரமிப்பு செய்ய முயன்று வருகின்றார்.

(1.10) எனவே பிராது தபசில் மற்றும் எதிர்வழக்குரை தபசில் சொத்தின் அளவுகள், அம்சங்கள் மற்றும் அதன் அமைவுகளை நில அளவையர் உதவியுடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்வதன் மூலம் பிராது தபசில் மற்றும் எதிர்வழக்குரை தபசில் சொத்தின் உண்மை தன்மை நீதிமன்றத்திற்கு தெரியவரும்.

(1.11) மேலும் தாவா வழக்கில் அநேக வாய்மொழி சாட்சியத்தை தவிர்க்க ஏதுவாக அமையும். மேற்படி ஆணையரை நியமனம் செய்யாதபட்சத்தில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடுவதுடன், மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பு உண்மை நிலையை சமூகம் நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த முடியாத நிலை ஏற்படக்கூடும். எனவே பிராது தபசில் மற்றும் எதிர்வழக்குரையில் கண்ட சொத்துக்களை, நீதிமன்ற



P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI
Date: 2024.12.05 15:53:58 +0530

ஆணையரை நியமனம் செய்து, மனு தபசில் சொத்தை பார்வையிட்டு ஆணையர் வரைபடம், புகைப்படம் சகிதம் விரிவான ஆணையர் அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும்</u> <u>எதிருரைச் சுருக்கம்:-</u>

(2.1) மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்படக்கூடியது. உண்மையில் மனு தபசில் சொத்தானது எதிர்மனுதாரர்/வாதிக்கு கடந்த 24.11.1971 தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டதாகும். மனு தபசில் சொத்தை சுற்றி எதிர்மனுதாரர்/வாதி முள்வேலி அமைத்து ஊரறிய அனுபவம் செய்து வருகிறார்.

(2.2) மனு தபசில் கண்ட சொத்து காலியாக உள்ளது. மனு தபசில் சொத்திற்கும், மனுதாரர்/பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. எதிர்மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டட 24.11.1971 தேதிய கிரைய ஆவணத்தில் கிழக்கு புறத்தில் ரீத்தா அம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட நிலம் என்று தெளிவாக கூறியுள்ளார். மேற்படி ரீத்தா அம்மாளிடம் இருந்துதான் மனுதாரர்/பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார்.

(2.3) மேற்படி ரீத்தா அம்மாள் கிரையம் பெற்றுள்ள 10.01.1970 தேதிய சாத்தான்குளம் சார்பதிவக ஆவண எண்:189/1970 ஆவணத்தில் துரைபாண்டி நாடார் (எதிர்மனுதாரர்/வாதியின் கிரையதாரர்) நிலத்திற்கு மேற்கு என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்கோரிக்கை தபசிலாக காட்டப்பட்டுள்ள சொத்து அரசுக்கு சொந்தமான நிலமாக இருந்தால், அதனை வருவாய்துறை ஆவணங்களில் புலவரைபடம் வைத்து பார்த்தாலே நன்றாக தெரியும். ஆனால் மனுதாரர்/பிரதிவாதி தாப்பில் நீதிமன்றத்தில் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி எதிர்கோரிக்கை பரிகாரம் கேட்டுள்ளனர்.

(2.4) அதனையிட்டும் தாவா மனுவானது தள்ளுபடி செய்யக்கூடியதாகும். மனுதாரர்/பிரதிவாதி தனக்கு வழக்கு சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கில் ஆவணங்கள் அடிப்படையிலேயே வழக்கு சொத்தை நிருபிக்க வேண்டும்



P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI
Date: 2024.12.05 15:54:07 +0530

என்று சட்ட நியதியாகும்.

(2.5) மேலும் மனுதாரர்/பிரதிவாதி, கிரையம் பெற்ற 24.06.2011 தேதிய செட்டில்மெண்ட் ஆவணமானது, மனுதாரர்/பிரதிவாதியின் கணவர் எழுதிக் கொடுத்த ஆவணமாகும். மனுதாரர்/பிரதிவாதியின் கணவர் தான் பிறப்பித்துக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் எல்கை விபரங்களை தவறாக குறிப்பிட்டுவிட்டு அதன் அடிப்படையில் வழக்கு சொத்தினை நில அளவை செய்ய கோருவது ஏற்புடையதல்ல.

(2.6) மேலும் மனுதாரர்/பிரதிவாதியின் முன் கிரையதாரரான ரீத்தா அம்மாள் கிரையம் பெற்ற 10.01.1970 தேதிய கிரைய ஆவணத்தில் மேற்கு பக்க எல்கை மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர்/பிரதிவாதி வேண்டுமென்றே உண்மை சங்கதிகளை மறைத்து தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார். அதனையிட்டும் தாவா மனு தள்ளுபடி செய்யக்கூடியதாகும். எனவே, இம்மனுவினை எதிர்மனுதாரர்கள் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

**<u>4) தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை</u> :–**

ஆணையர் நியமனம் அவசியமானதா? மற்றும் இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**<u>5) தீர்வு :</u>**

(5.1) அசல் வழக்கானது, பிராது தபசில் கண்ட சொத்து வாதிக்கு கடந்த 24.11.1971 தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டு, பிராது தபசில் சொத்தை சுற்றி முள் வேலி அமைத்து அனுபவம் செய்து வரும்நிலையில், பிரதிவாதி 10.06.2023 முதல் வாதி அமைத்த முள்வேலியை அப்புறப்படுத்த முயற்சித்து வருவதாலும், வழக்கு சொத்திற்கு தென்புறம் பாதை அமைக்கவோ, வழக்க சொத்தின் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்ய முயற்சிப்பதாகவும், எனவே பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வாதியால் 16.06.2023 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI Date: 2024.12.05 15:54:17 +0530

(5.2) அசல் வழக்கில் 19.09.2023 ல் எதிர்பரிகார கோரிக்கையுடன் கூடிய எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, 3.1.10.2023 ல் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, 01.03.2024 ல் எழுவினாக்கள் வனையப்பட்டு, 20.03.2024 முதல் 29.04.2024 வரை வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளநிலையில், வாதி தரப்பில் வழக்குரையை சீர்திருத்த செய்ய வேண்டி இ.ம.எண்.230/2024 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பின்னர், 04.09.2024 ல் வழக்கு விசாரணைக்கு வாய்தா போடப்பட்ட நிலையில், வாதி தரப்பில் ஆஜரில்லாததால் அசல் வழக்கானது வாதியின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(5.3) பின்னர், அசல் வழக்கானது எதிர்கோரிக்கை மனுதாரர் தரப்பு விசாரணைக்காக வழக்கு வாய்தா போடப்பட்ட நிலையில், வாதியால் அசல் வழக்கை கோப்பிற்கு எடுக்க வேண்டி, இ.ம.எண்.383/2024 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு, அசல் வழக்கு மீண்டும் கோப்புக்கு எடுக்கப்பட்டு, அசல் வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு, 25.09.2024 ல் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

(5.4) மேற்படி வா.சா.1 மூலம், வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு, வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக 30.09.2024 முதல் 16.10.2024 வரை வாய்தா போடப்பட்ட நிலையில், வாதி தரப்பில், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ஆவண எண்:1341/2011 ன் முந்தைய ஆவணமான 10.01.1970 தேதிய சாத்தான்குளம் சார்பதிவக கிரைய ஆவண எண்:189/1970–ன் சார்பதிவக நகலை குறியீடு செய்ய வேண்டி, இ.ம.எண்.460,461/2024 என்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளது.

(5.5) பின்னர், அசல் வழக்கு வாதி தரப்பு வா.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்ட நிலையில், பிராது தபசில் மற்றும் எதிர்வழக்குரையில் கண்ட சொத்துக்களை நில அளவையர் உதவியுடன் அளவை செய்து அதன் தன்மை மற்றும் அமைப்புகளை கண்டறிந்து வரைபடம் சகிதம் அறிக்கை தாக்கல் செய்யும் பொருட்டு நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி,



P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI
Date: 2024.12.05 15:55:15 +0530

மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(5.6) ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில், எதிர்கோரிக்கை தபசில் சொத்து அரசுக்கு சொந்தமானதாக இருந்தால், அதனை வருவாய் துறை ஆவணங்களின் புல வரைபடம் வைத்து பார்த்தாலே அறிந்து கொள்ள முடியும் என்றும், அசல் வழக்கில் எதிர்மனுதாரர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளதால் அதனை ஆவணங்களின் அடிப்படையிலேயே நிரூபிக்க வேண்டும் என்பதே சட்ட நியதி என்றும் மறுக்கப்பட்டுள்ளது.

(5.7) அசல் வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கு சொத்திற்கு தென்புறம் எவ்வித பாதையும் இல்லை என்று கூறியுள்ளார். மேலும், எதிர்மனுதாரர் தான் கிரையம் பெற்ற சொத்தினையே தபசிலாக அசல் வழக்கில் காட்டி, அதனை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளார். ஆனால் இம்மனுதாரர் தரப்பில் சாத்தான்குளம்–முதலூர் பிரதான சாலையிலிருந்து மேற்படி பாதை ஆரம்பித்து மேற்கு பக்கம் திரும்பி பின்பு வடபுறமாக சென்று, பின்னர் மீண்டும் மேற்புறம் திரும்பி வடபுறம் சென்று சாலையுடன் இணைகிறது என்று கூறியுள்ளார்.

(5.8) மேலும், இம்மனுதாரர் மேற்படி பாதை ஊர் மக்கள் அனைவரும் பயன்படுத்தும் பொதுப்பாதை என்று கூறியுள்ளார். அதனை தனது எதிர்பரிகார கோரிக்கையில் தனி தபசிலாக காட்டியுள்ளார். எதிர்மனுதாரர் அசல் வழக்கினை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி தாக்கல் செய்துள்ளபோதிலும், எதிர்பரிகார கோரிக்கை தபசில் சொத்தை பொறுத்து, இம்மனுதாரர் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரியுள்ளார். மேலும், எதிர்பரிகார கோரிக்கை தபசில் சொத்தில் முழு புல எண்.600 ல், 2.82 ஏக்கரில் தென்புறம் மத்தியில் நான்கெல்கைக்குட்பட்ட கிழமேல் 9 அடி, தென்வடல் 63 அடி பொதுப்பாதை என காட்டப்பட்டுள்ளது.

(5.9) மேற்படி பாதைக்கு தற்போதைய உட்பிரிவு எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே, மேற்படி பாதை அமைப்பு எவ்வாறு உள்ளது என்று அறிவது இவ்வழக்கினை தீர்வு காண ஏதுவாக அமையும் என்றும், இதன்மூலம் அநேக வாய்மொழி சாட்சியங்கள்



P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI
Date: 2024.12.05 15:55:25 +0530

குறைக்கப்படும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை. எனவே, ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று என்று தீர்வு காண்கிறது.

**இறுதியாக இம்மனு, செலவு தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் திரு.A.ஜோ ஜெகதீஸ் அவர்கள், இம்மனுவில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுகிறார். ஆணையர் இரு தரப்பிலும் அறிவிப்பு கொடுத்து, வழக்கு சொத்து மற்றும் எதிர்பரிகார கோரிக்கை சொத்து ஆகியவற்றை, தகுதி வாய்ந்த நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு, 24.11.1971 தேதிய கிரைய ஆவணம் மற்றும் 24.06.2011 தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் வருவாய் ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அளவீடு செய்து, விரிவான அறிக்கை மற்றும் வரைபடத்தினை தாக்கல் செய்ய பணிக்கப்படுகிறார். ஆணையர் ஊதியம் ரூ.10,000/—ஆக நிர்ணயிக்கப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தி சரி பார்க்கப்பட்டு 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI Date: 2024.12.05 15:55:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

<u>இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் :— </u> இல்லை

P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI Date: 2024.12.05 15:55:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

District Munsif Court,
Sathankulam.
I.A.475/2024 in O.S.61/2023
Fair/Draft order
Dated : 05.12.2024